# வருவாய்த்துறை

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | | உதவிப் பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை தொலைபேசி/ நிகரி விவரங்கள் |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | 3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | **<u>இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம்</u>** அரசாணை நிலை எண்.73, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் 22.1.1962 ன் கீழான முதியோர் ஓய்வூதியத் திட்டம் 19.11.2007 முதல் இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசிய திட்டம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. (அரசாணை நிலை எண்.21, ச.ந.(ம)ச.தி.துறை, நாள்: 16.11.2007) | மாதத்திற்கு ரூ.400 (ரூ.200 மைய அரசும், ரூ.200 மாநில அரசும் வழங்குகிறது.)<br>1) தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைகளுக்கு நபருக்கு ஒரு இலவச வேட்டி / சேலை<br>2) மதிய உணவுத் திட்டத்தில் பங்கெடுப்போருக்கு மாதத்திற்கு 2 கிலோ இலவச அரிசி அல்லது மதிய உணவுத் திட்டத்தில் பங்கெடுக்காதவர்களுக்கு மாதத்திற்கு 4 கிலோ இலவச அரிசி<br>3) முதியோர் உதவித் தொகை பெறும் நபர்களில் மிகவும் வயது முதிர்ந்தவர்களுக்கு அன்னபூர்ணா திட்டத்தின்கீழ் மாதம் 10 கிலோ இலவச அரிசி வழங்கப்படும். இவர்களுக்கு மேலே கலம் 3ல் கண்ட அரிசி / உணவு வழங்கப்படமாட்டாது. | வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பத்தைச் சார்ந்த 65 வயதிற்கு மேற்பட்டவர் | குடும்ப அட்டை நகல் | மாவட்டாட்சியர், வட்டாட்சியர் தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | முதன்மை செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் , சேப்பாக்கம், சென்னை –5<br>தொலைபேசி:28414550<br>நிகரி : 28511593 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | | உதவிப் பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை தொலைபேசி/ நிகரி விவரங்கள் |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | 3) | (4) | (5) | (6) | (7) |
| 2. | <u>**ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஒய்வூதியத் திட்டம்**</u> (அரசாணை 1402, நிதித்துறை, நாள் 6.11.1974) | 1) மாதத்திற்கு ரூ.400<br>2) தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைகளுக்கு நபருக்கு ஒரு இலவச வேட்டி / சேலை<br>3) மதிய உணவுத் திட்டத்தில் பங்கெடுப்போருக்கு மாதத்திற்கு 2 கிலோ இலவச அரிசி அல்லது மதிய உணவுத் திட்டத்தில் பங்கெடுக்காதவர்களுக்கு மாதத்திற்கு 4 கிலோ இலவச அரிசி | 1) 45 வயது மற்றும்அதற்கு மேற்பட்டோர்.<br>2) 60% மற்றும் அதற்கு மேல் ஊனம்.<br>3) 45 வயதிற்கு கீழுள்ளவர்–களுக்கு மாவட்டக் குழுவின் பரிந்துரைப்படி ஒய்வூதியம் வழங்கப்படும் .<br>4) முழுவதும் கண் பார்வை–யற்றவர்களுக்கு வயது வரம்பு இல்லை.<br>5) ரூ.5,000/–க்கு மேல் சொத்து இல்லாதவராக இருத்தல் வேண்டும்.<br>6) உழைத்து வாழ இயலாதவராக இருத்தல் வேண்டும்.<br>7) வருமானம் ஆதாரம் இல்லாதவராக இருத்தல் வேண்டும்.<br>8) 20 வயதிற்கு மேற்பட்ட மகன் அல்லது மகனின் மகன் ஆதரவு அளிக்கக்கூடியவராக இருத்தல் கூடாது. | குடும்ப அட்டை நகல் | மாவட்டாட்சியர், வட்டாட்சியர், தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | முதன்மை செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் , சேப்பாக்கம், சென்னை –5<br>தொலைபேசி:28414550<br>நிகரி : 28511593 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | | உதவிப் பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை தொலைபேசி/ நிகரி விவரங்கள் |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | 3) | (4) | (5) | (6) | (7) |
| 3. | **<u>ஆதரவற்ற விதவை ஓய்வூதியத் திட்டம்</u>** (அரசாணை 507, நிதித் துறை நாள் 27.5.1975) | 1) மாதத்திற்கு ரூ.400<br>2) தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைகளுக்கு நபருக்கு ஒரு இலவச வேட்டி / சேலை<br>3) மதிய உணவுத் திட்டத்தில் பங்கெடுப் போருக்கு மாதத்திற்கு 2 கிலோ இலவச அரிசி அல்லது மதிய உணவுத் திட்டத்தில் பங்கெடுக்காத வர்களுக்கு மாதத்திற்கு 4 கிலோ இலவச அரிசி | 1) வயது வரம்பு இல்லை<br>2) மறுமணம் செய்திருக்கக் கூடாது.<br>3) வருமானம் ஏதுமின்றி வயது வந்த மகன்கள் இருந்தாலும் ஓய்வூதியம் வழங்கலாம்.<br>4) பிச்சை எடுப்பது தொழிலாக இருத்தல் கூடாது.<br>5) வருமானம் ஆதாரம் இல்லாதவராக இருத்தல் வேண்டும்.<br>6) ரூ.5,000/—க்கு மேல் சொத்து இல்லாதவராக இருத்தல் வேண்டும். | குடும்ப அட்டை நகல். | மாவட்டாட்சியர், வட்டாட்சியர் தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | முதன்மை செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் , சேப்பாக்கம், சென்னை —5<br>தொலைபேசி:28414550நிகரி : 28511593 |
| 4. | **<u>ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம்</u>** (அரசாணை 164, ச.ந.(ம) ச.தி. துறை, நாள் 12.5.1981). | 1) மாதத்திற்கு ரூ.400<br>2) தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைகளுக்கு நபருக்கு ஒரு இலவச வேட்டி / சேலை<br>3) மதிய உணவுத் திட்டத்தில் பங்கெடுப்போருக்கு மாதத்திற்கு 2 கிலோ இலவச அரிசி அல்லது மதிய உணவுத் திட்டத்தில் பங்கெடுக்காதவர்களுக்கு மாதத்திற்கு 4 கிலோ இலவச அரிசி | 1) 60 வயது மற்றும் அதற்கும் மேற்பட்டோர்<br>2) வருமானம் ஏதும் இல்லாதவர்கள்.<br>3) பிச்சை எடுப்பது தொழிலாக இருத்தல் கூடாது.<br>4) ரூ.5,000/—க்கு மேல் சொத்து இல்லாதவராக இருத்தல் வேண்டும்.<br>5) விவசாயக் கூலித் தொழிலாளியாக இருத்தல் வேண்டும்.<br>6) 20 வயதிற்கு மேற்பட்ட மகன் (அல்லது) பேரன் (மகனின் மகன்) ஆதரவு அளிக்க கூடியவராக இருத்தல் கூடாது. | குடும்ப அட்டை நகல் | மாவட்டாட்சியர், வட்டாட்சியர் தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | முதன்மை செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் , சேப்பாக்கம், சென்னை —5<br>தொலைபேசி:28414550<br>நிகரி : 28511593 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | | உதவிப் பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை தொலைபேசி/ நிகரி விவரங்கள் |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | 3) | (4) | (5) | (6) | (7) |
| 5. | <u>கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற மனைவியருக்கு ஓய்வூதியத் திட்டம்</u> அரசாணை 1465, ச.ந.(ம) ச.தி.துறை, நாள் 3.5.1984) | 1) மாதத்திற்கு ரூ.400<br>2) தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைகளுக்கு நபருக்கு ஒரு இலவச வேட்டி / சேலை<br>3) மதிய உணவுத் திட்டத்தில் பங்கெடுப்போருக்கு மாதத்திற்கு 2 கிலோ இலவச அரிசி அல்லது மதிய உணவுத் திட்டத்தில் பங்கெடுக்காதவர்களுக்கு மாதத்திற்கு 4 கிலோ இலவச அரிசி | 1) குறைந்தபட்சம் வயது 30<br>2) முறையான திருமணம் ஆனவர்.<br>3) குறைந்தது 5 வருடங்கள் பிரிந்து வாழ்பவர்.<br>4) வருமானம் ஏதுமின்றி வயது வந்த மகன்கள் இருந்தாலும் ஓய்வூதியம் வழங்கலாம்.<br>5) ரூ.5,000/—க்கு மேல் சொத்து இல்லாதவராக இருத்தல் வேண்டும்.<br>6) வருமானம் ஆதாரம் இல்லாதவராக இருத்தல் வேண்டும். | குடும்ப அட்டை நகல். | மாவட்டாட்சியர், வட்டாட்சியர் தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | முதன்மை செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் , சேப்பாக்கம், சென்னை —5 தொலைபேசி:28414550நிகரி : 28511593 |
| 6. | <u>50 வயதினை எட்டி, வாய்ப்பு வசதியல்லாததால் திருமணமாகாமலிருக்கும் ஏழை, உழைக்கும் திறனற்ற பெண்களுக்கான ஓய்வூதியம்</u> | 1) மாதத்திற்கு ரூ.400/—<br>2) தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைகளுக்கு நபருக்கு ஒரு இலவச வேட்டி / சேலை.<br>3) மதிய உணவு திட்டத்தில் பங்கெடுப்போருக்கு மாதத்திற்கு 2 கிலோ அரிசி அல்லது, மதிய உணவு திட்டத்தில் பங்கெடுக்காதவர்களுக்கு மாதத்திற்கு 4 கிலோ இலவச அரிசி. | 1) 50 வயதினை நிறைவு செய்து திருமணமாகாத பெண்ணாக இருக்க வேண்டும்.<br>2) எவ்வித வருமானமோ அல்லது பிழைப்புதியத்திற்கான ஆதரவு வழியோ பெற்றிருத்தல் கூடாது.<br>3) பிச்சை எடுத்தலை தொழிலாக கொண்டிருத்தல் கூடாது. | குடும்ப அட்டை நகல் | மாவட்டாட்சியர் / வட்டாட்சியர் / தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம் ) | முதன்மை செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர் தொலைபேசி 044—28414550<br>நிகரி 044—28511593 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | | உதவிப் பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை தொலைபேசி/ நிகரி விவரங்கள் |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | 3) | (4) | (5) | (6) | (7) |
| 7. | <u>**நலிந்தோா குடும்ப நலத் திட்டம்**</u> (அரசாணை எண்.470,நிதித் துறை (மு.அ.பொ.நி.நி. நாள்: 23.5.1989) | 1) ரூ.10,000/– (மைய அரசு உதவித்தொகை)<br><br>2) மரணமடைந்த நாளிலிருந்து 6 மாதங்களுக்குள் தனி வாட்டாட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) அவர்களுக்கு 1 1/2 வருடத்திற்குள் மாவட்ட ஆட்சியருக்கும் மனு செய்தல் வேண்டும். | 1) பொருளீட்டக்கூடிய குடும்பத் தலைவரை / தலைவியை இழந்த குடும்ப வாரிசு.<br>2) விவசாயத் தொழிலை நம்பியிருக்கும் நிலமற்ற தொழிலாளரின் குடும்பம்.<br>3) 2.5 ஏக்கர் பாசன நிலம் (அ) 5 ஏக்கர் பாசன வசதியற்ற நிலம் அல்லது பாசன மற்றும் பாசன வசதியற்ற நிலத்திற்கு சமமாக நிலமுடைய சிறு/குறு விவசாய குடும்பம். பாசன நிலம் மற்றும் பாசனமற்ற நிலம் ஒருவருக்கு இருப்பின் 1 ஏக்கர் பாசன நிலத்திற்கு 2 ஏக்கர் பாசனமற்ற நிலம் என கணக்கிடல் வேண்டும். குத்தகை சாகுபடி எனில் 1 ஏக்கர் குத்தகை சாகுபடி நிலத்தினை 0.5. ஏக்கர் என கணக்கிட்டு மொத்த நிலத்தின் பரப்பை கண்டறிய வேண்டும்.<br>4) அனைத்து ஆதாரங்கள் மூலமாக பெறும் ஆண்டு வருமானம் ரூ.7,200/– லிருந்து ரூ.24,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. (அரசாணை எண்.358, வருவாய் (இஇ 1(1) துறை, நாள்: 23–6–2008) | 1) குடும்பத் தலைவரின் இறப்புச் சான்று.<br>2) குடும்ப அட்டை நகல். | மாவட்ட ஆட்சியர் / வட்டாட்சியர் / தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம் ) | முதன்மை செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர் தொலைபேசி–044–28414550. நிகரி– 044–28511593 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிவாய்ந்தோர் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத்தலைமை/தொலைபேசி/ நிகரி/ விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 8. | (1) <u>விபத்து நிவாரணத் திட்டம்</u><br>(அரசாணை 471, நிதித் துறை, (மு.அ.பொ.நி.நி) நாள் 23.5.1989) மரணமடையும் கட்டிடத் தொழிலாளர்களுக்கு ரூ.10,000/– (மைய அரசு உதவித் தொகை) மற்றும் ரூ.5,000/– (மாநில அரசு உதவித் தொகை)ஆக மொத்தம் ரூ.15,000/– (அரசாணை 845, வ.து., நாள் 28.8.1986)<br>(அரசாணை 11, ச.ந.(ம) ச.தி.துறை நாள் 22.1.99)<br><br>திட்டம் \| விவரம்<br><br><u>விவரம்</u><br>மரணமடைந்த தேதியிலிருந்து 6 மாதங்களுக்குள் தனிவட்டாட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) அவர்களுக்கும் 1 1/2 வருடத்திற்குள் மாவட்ட ஆட்சியருக்கும் மனு செய்தல் வேண்டும். | ஆரசாணை 471, நிதித்துறை, (மு.அ.பொ.நி.நி.) நாள்: 23.5.1989)ல் கீழே குறிப்பிடப்பட்ட 44 வகை தொழிலாளர்களின் ஏழை வாரிசுதாரர்கள்.<br><br>1) சலவைத் தொழிலாளி<br>2) காலணித் தொழிலாளி<br>3) தச்சர்கள், மரவண்டி கட்டுவோர்<br>4) விலங்குகள் இழுத்துச் செல்லும் வண்டியோட்டிகள்<br>5)கருமார், சுத்தியல் கருமார்<br>6) பொன் வேலை செய்வோர் வெள்ளி வேலை செய்வோர்.<br>7) கூடை முடைவோர்<br>8) கல் தச்சர்கள், கல்லில் குடைவோர், கட்டிடத் தொழிலாளி<br>9) ஓடு தொழிலாளர்கள்<br>10) செங்கல் அடுக்குவோர்<br>11) கிணறு கட்டுவோர்கள்<br>12) கிணறு தோண்டுவோர்கள்<br>13) வேளாண்மைத் தொழிலாளர்கள் சிறுவிவசாயிகள் மற்றும் குறு விவசாயிகள் (2.5. ஏக்கருக்கு குறைவாக நில முள்ளவர்கள்)<br>14) பதனீர் இறக்குவோர்<br>15) கழிவு நர் அகற்றும் தொழிலாளர்கள்<br>16) பூச்சி மருந்து தெளிப்பவர்கள்<br>17) பனை மரம் / தென்னை மரம் ஏறுவோர்<br>18) மீனவர்கள் (கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக அல்லாதவர்<br>19) கட்டிடம் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள்<br>20) டிரக் ஒட்டுபவர்கள்<br>21) ஆட்டோ, ரிக்ஷா ஒட்டுநர்கள்<br>22) தனியார் கார், வாடகைக்கார் மற்றும் பஸ் ஒட்டுபவர்கள் (வாகனங்கள் சொந்தமாக இல்லாதவர்கள் மட்டுமே தகுதி பெற்றவர்கள்)<br>23) முடி திருத்துபவர்<br>24) கை வண்டி ஒட்டுநர்<br>25) மிதி வண்டி ஒட்டுநர் | 1) முதல் தகவல்<br>2) இறப்புச் சான்று | மாவட்ட ஆட்சியர் / வ ட்டாட்சியர் / தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | முதன்மை செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் சேப்பாக்கம், சென்னை –5 தொலைபேசி:28414550 நிகரி : 28511593 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிவாய்ந்தோர் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத்தலைமை/தொலைபேசி/ நிகரி/ விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | 26) தனியார் துறையிலுள்ள கைத்தறி நெசவாளர்கள்<br>27) மண்பாண்டம் மற்றும் மண் பொம்மைகள்செய்யும் குயவர் குலாலர் மற்றும் வேளார்.<br>28) வீடுகளில் பணிபுரிவோர்<br>29) பாம்பு பிடிக்கும் தொழில் ஈடுபடுவோர்.<br>30) சினிமா படப்பிடிப்பின் போது சம்பந்தப்பட்ட சினிமா தொழிலாளர்கள் என்ற வகையில் அமையும் சினிமா நடிகர்கள்.<br>31) தினக்கூலி பெறும் செங்கல் தொழிலாளர்கள்<br>32) லாரிகளில் பாரம்/ ஏற்றி இறக்கும் ஏழைத் தொழிலாளர்கள்<br>33) ஏழைத் தையல் தொழிலாளர்கள்.<br>34) வெள்ளை அடிப்போர், வண்ணம் பூசுவோர் மற்றும் மின் விளைஞர்கள்.<br>35) கிராமிய நடனக் கலைஞர்கள்<br>36) சமையல் தொழில் செய்பவர்கள்.<br>37) மாவு மில்லில் வேலை செய்யும் தொழிலாளர்கள்<br>38) தனியார் பேருந்தில் பணிபுரியும் நடத்துநர்கள்.<br>39) பந்தல் மேடை, மண்டபம், மாநாடு திருமணப் பந்தல், அலங்கார வளைவுகள் அமைக்கும் தொழிலாளர்கள்<br>40) மலைகளிலுள்ள மரங்கள் மற்றும் பாறைகளில் ஏறி கல்பாசம் கடுக்காய் மற்றும் தேன் போன்ற வனப் பொருள்களைச் சேகரம் செய்யும் தொழிலாளர்கள் (கூட்டுறவுச் சங்கத்து உறுப்பினர்களாக இல்லாதவர்கள் மட்டும்).<br>41) தனியாருக்குச் சொந்தமான கார், லாரி, டிரக் வேன்களில் வேலை பார்க்கும் டிரைவர் மற்றும் கிளீனர்கள்.<br>42) பிளம்பர்.<br>43) பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள்.<br>44) ஓவியர்கள்.<br>(மேற்குறிப்பிட்ட 44 வகை தொழில்களில் ஏதாவது ஒன்று செய்பவராக இருக்க வேண்டும். அவ்வாறு மேற்குறிப்பிட்ட 44 தொழில்களில் ஏதாவது ஒரு தொழில் செய்பவராக இருந்து தொழிலில் ஈடுபட்டிருக்கும்போதோ அல்லது சாதாரணமாக இறப்பு நேரிட்டாலோ நிவாரணம் பெற தகுதியுடையவராவார். | | | |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிவாய்ந்தோர் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத்தலைமை/தொலைபேசி/ நிகரி/ விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | (2) <u>விபத்து நிவாரணத் திட்டம்</u><br>(அரசாணை 471, நிதித் துறை, (மு.அ.பொ.நி.நி) நாள் 23.5.1989)<br>1. மரணமடையும் கட்டிடத் தொழிலாளர்களுக்கு ரூ.10,000/– (மைய அரசு உதவித் தொகை) மற்றும் ரூ.5,000/– (மாநில அரசு உதவித் தொகை).<br>(அரசாணை 845, வ.து., நாள் 28.8.1986)<br>(அரசாணை 11, ச.ந.(ம) ச.தி.துறை நாள் 22.1.99)<br>மரணமடைந்த நாளிலிருந்து 6 மாதங்களுக்குள் தனி வட்டாட்சியர் / சமூக பாதுகாப்பு திட்டம் அவர்களுக்கும் 1 ½ வருடங்களுக்குள் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும் மனு செய்தல் வேண்டும். | கட்டிடத்தொழிலாளரின் வாரிசுதாரர் | 1. இறப்புச் சான்று<br>2. பிரேத பரிசோதனை அறிக்கை.<br>3. முதல் தகவல் அறிக்கை. | மாவட்ட ஆட்சியர் / வட்டாட்சியர் / தனி வட்டாட்சியர் ( சமூக பாதுகாப்பு திட்டம் ) | முதன்மை செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் , சேப்பாக்கம், சென்னை –5<br>தொலைபேசி:28414550<br>நிகரி : 28511593 |
| | 2. முதலமைச்சர் பொது நிவாரண நிதிநிலிருந்து ரூ.10,000/–<br>(அரசாணை 153, தொ.ந.துறை, நாள் 15.7.1993).<br>(மொத்தம் ரூ.25,000/–) | கட்டிடத்தொழிலாளரின் வாரிசுதாரர் | 1. உரிய படிவத்தில் மனு.<br>2. இறப்புச் சான்று<br>3. பிரேத பரிசோதனை அறிக்கை.<br>4. முதல் தகவல் அறிக்கை.<br>5. $1^{1}/_{2}$ வருடத்திற்குள் மனு செய்தல் வேண்டும். | மாவட்ட ஆட்சியர். | அரசு தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறை |
| | (3) <u>விபத்தில் காயமடைவோருக்கு</u><br>(அரசாணை 471, நிதித் துறை, (மு.அ.பொ.நி.நி) நாள் 23.5.1989)<br>விபத்தில் கடுங்காயம் அடைந்தவருக்கு காயத்தின் தன்மைக்கு ஏற்றபடி ரூ.7,500/– முதல் ரூ.15,000/– வரை )<br>(அரசாணை 570, வருவாய்த்துறை (இ.இ.1), நாள் 27.10.1999.) | அரசாணை 471, நிதித்துறை (மு.அ.பொ.நி.நி),நாள் 23.5.1989–ல் குறிப்பிடப்பட்ட 44 வகை தொழில் செய்யும் ஏழைத் தொழிலாளர்கள் | 1) வெள்ளைத் தாளில் மனு<br>2) மருத்துவச் சான்று<br>3) முதல் தகவல் அறிக்கை | வட்டாட்சியர்/ தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் , சேப்பாக்கம், சென்னை –5<br>தொலைபேசி:28414550<br>நிகரி : 28511593 |